# புறநானூற்றுப் புதையல் – 3

## வண்டிச்சக்கரப் பல்லி

கதை: இ.ஜே.சுந்தர்

ஓவியம்: ஷேக்





செழியன் ஒரு குழுவோடு சென்று பசக்கூட்டத்தை மீட்டுத் தா் வாள் விச்சால் பகைக்கூட்டத்தை ஊர் எல்லையை விட்டுத் துரத்துகிறான்.
ஆ!
எதிர்பாராது பகைவீரன் ஒருவன் ஊர் எல்லையில் செழியன் மார்பின் மீது வேல் பாய்ச்ச அவன் விழுப்புண் பட்டுச் சாய்கிறான்.
செழியன் உடலைச் சுமந்தபடி வீரர்கள் முல்லையிடம் வருகின்றனர்.
முல்லை: ஐயோ! விரைவில் திரும்புவேன் என்றீரே. சடலமாகவா திரும்பி வரவேண்டும்? நீங்கள் சென்ற இடத்திற்கே நானும் வருகிறேன்
உறவினர்: அடுத்து நடக்கவேண்டியதைப் பார்ப்போம். ஈமத்தாழி செய்யும் குயவரை அழையுங்கள்.


சடலத்தைப் பார்த்தபடி குயவர் நிற்கிறார்.
முல்லை:
மட்கலம் செய்யும் கோவே என் கணவருக்காகவா தாழி செய்ய வந்தீர்? கொஞ்சம் பொறுங்கள்.
8
குயவர்: என்னம்மா சொல்கிறீர்.
9
முல்லை:
வண்டி சக்கரப் பல்லியைக் கவனித்திருக்கிறீரா ஐயா?
10
குயவர்: ஆம். சக்கரத்தின் ஆரத்தில அமர்ந்து அதனுடன் எல்லா இடத்திற்கும் அதுவும் செல்லும்.
11
முல்லை: என் வாழ்வின் சக்கரம் அவர். அவரன்றி வேறு அறியேன். அதில் பல்லியாக நான் ஒட்டியிருந்தேன். துன்பத்திலும் இன்பத்திலும் அவரோடு இணைந்து பயணித்தேன். இந்தப் பயணம் தொடர வேண்டாமா?









தாமிரபரணி ஆற்றின் கரையிலுள்ள ஆதிச்சநல்லூரில் 169 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் சில 3000 ஆண்டுகள் பழையவை. இந்தப் புறநானூற்றுப் பாடல் இங்கு ஒரு தாழியில் புதைந்த ஒரு மங்கையின் பாட்டோ? இதைப் பாடியவர் பெயர் அறியப்படவேயில்லை. இன்னும் எத்தனை கதைகள் புதையுண்ட தாழிகளில் உள்ளனவோ?

(ஆதிச்சநல்லூர்தாழிகள் பற்றி அண்மைய ஆய்வு விவரங்கள் அறிய தொடர்பு கொள்க:
tamilmalarnews.com/ஆதிச்சநல்லூர்–கலம்–செய்/)

14